கருத்தரங்கு – 2019 விடியல் கல்வியகம்

பொருளியல் - I

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை – 2020

General Certificate of Education (Advanced Level) Examination - 2020

01. பொருளாதார வினைதிறன் என்பது,
   I. முழு உற்பத்தி செயற்பாட்டையும் வினைதிறனாக மேற்கொள்ளல்
   II. பொருளாதாரத்தை மிகவும் வினைத்திறனுடன் செயற்படுத்தல்
   III. பூரண வெளியீட்டையும், பூரண வேலைவாய்ப்பு நிலையையும் அடைதல்
   IV. குறைந்த காரணிச்செலவில் உற்பத்தியை மேற்கொள்ளல்
   V. சமூகம் விரும்பும் பொருட்கலவையை உற்பத்திச் செய்வதற்கு அருமையான வளங்களை உச்ச வினைத்திறனுடன் பயன்படுத்தல்

02. பொருளியல் என்பது தொடர்பாக மிகச் சரியான விடையைத் தெரிக.
   i. வரையறுக்கப்பட்ட வளங்களை வினைத்திறனுடன் பயன்படுத்தல்.
   ii. மாற்றுப் பயனுடைய வளங்களை வினைத்திறனுடன் பயன்படுத்தல்.
   iii. எல்லையற்ற விருப்பங்களை நிறைவு செய்யும் பொருட்டு வரையறுக்கப்பட்ட வளங்களை வினைத்திறனுடன் பயன்படுத்தல்.
   iv. எல்லையற்ற விருப்பங்களை நிறைவு செய்யும் பொருட்டு வரையறுக்கப்பட்ட வளங்களை பூரணமாக பயன்படுத்தல்.
   v. எல்லையற்ற விருப்பங்களை நிறைவு செய்ய வரையறுக்கப்பட்ட வளங்களை உற்பத்தி, விநியோகம், நுகர்வில் வினைத்திறனாக பயன்படுத்தல்.

03. எந்த ஒரு தெரிவினதும் தோன்றுகின்ற உண்மையான செலவு என்பது
   i. அத்தகைய தெரிவு தொடர்பாக ஏற்படுகின்ற சகல பணக் கொடுப்பனவுகளும்
   ii. அத்தகைய தெரிவு தொடர்பாக ஏற்படும் இழக்கப்பட்ட வருமானங்கள்
   iii. அத்தகைய தெரிவு தொடர்பாக ஏற்படும் சகல அமையச் செலவுகளும்
   iv. அத்தகைய தெரிவு தொடர்பாக ஏற்படும் பணக் கொடுப்பனவுகளும் அமையச் செலவும்
   v. அத்தகைய தெரிவு தொடர்பாக ஏற்படும் பணக் கொடுப்பனவுக்கும் அமையச் செலவுக்கும் இடையிலான வேறுபாடாகும்.

04. இலவசக் கல்வியும் பெறக்கூடிய பாடசாலையொன்றும் தனியார் பாடசாலை ஒன்றும் அண்மையில் அமைந்துள்ளன. அத்தனியார் பாடசாலையில் கல்வி கற்கச் செல்லும் போது தோன்றும் அமையச் செலவு தொடர்பான விடயம் அல்லாதது எது?
   i. கல்விக்கான கட்டணம்
   ii. சீருடை தொடர்பான செலவுகள்
   iii. பாடப்புத்தகங்களை கொள்வனவு செய்யும் செலவு
   iv. பரீட்சைக் கட்டணம் தொடர்பான செலவுகள்
   v. போக்குவரத்து தொடர்பான செலவுகள்

05. கைத்தொழில் ஒன்றின் போட்டித்தன்மையை மட்டுப்படுத்தும் பிரவேச தடைக்கு உதாரணமாக அமையாதது,
   I. அளவுதிட்ட சிக்கனங்கள்
   II. இயற்கை தனியுரிமை
   III. அனுமதிப் பத்திரங்கள்
   IV. அத்தியாவசிய மூலப்பொருட்களின் உரிமை
   V. உற்பத்தி பேதப்படுத்தல்

06. யாருக்காக உற்பத்தி செய்தல் எனும் உற்பத்திப் பங்கீட்டுப் பிரச்சினை தோன்றக் காரணங்கள்

i. நாடுகளினால் உற்பத்தி செய்யக்கூடிய பண்டங்களின் அளவுகள் தனிநபர் வருமான மட்டங்கள் வேறுபடல்
ii. மாற்று முறையிலான காரணிச் சேர்க்கைத் தெரிவுகள், ஒப்பீட்டுச் செலவுகள் வேறுபடல்
iii. எல்லையற்ற விருப்பங்கள், வரையறுக்கப்பட்ட வளங்கள், வளங்களின் மாற்றுபயோகம்
iv. அருமையான மொத்த உற்பத்தியை மக்களிடையே பங்கிடுவது தொடர்பான பிரச்சினை
v. அடிப்படைப் பொருளாதார முறைமையிலுள்ள வேறுபாடுகள்

07. நிறைபோட்டிச் சந்தையிலுள்ள பண்டம் ஒன்றின் கேள்வி, நிரம்பல் தொடர்பான தரவுகள் வருமாறு,

விலை	**கேள்வி தொகை**	**நிரம்பல் தொகை**
2	50	0
4	40	10
6	30	20
8	20	30
10	10	40

இப்பண்டத்துக்கு அரசு அலகு வரியாக 2 ரூபாவை விதித்தால் சமநிலை விலை, சமநிலை தொகை அளவு யாது?

சமநிலை விலை	2	4	6	8	10
சமநிலை தொகை	10	20	30	20	30

I. (ii) (iii) (iv) (v)

08. நிறைபோட்டிச் சந்தையில் செயல் திறன் மிக்கதாக நிர்ணயிக்கப்பட்ட ஆகக் கூடிய கட்டுப்பாட்டு விலையொன்று நீக்கப்பட்டால் ஏற்படக்கூடிய மாற்றம் தொடர்பான சரியான தரவை தெரிக.

	சந்தை விலை	**சமநிலை தொகை**	**வழங்குனர் தொகை**
1.	உயர்வடையும்	உயர்வடையும்	உயர்வடையும்
2.	உயர்வடையும்	உயர்வடையும்	குறையும்
3.	குறையும்	குறையும்	உயர்வடையும்
4.	குறையும்	உயர்வடையும்	உயர்வடையும்
5.	குறையும்	குறையும்	குறையும்

09. கீழ் நோக்கிச் சாய்வுடைய கேள்வி கோட்டில் மேலிருந்து கீழாகக் செல்லும் போது விலைசார் கேள்வி நெகிழ்ச்சிப் பெறுமானம் மாறுபடக் காரணம்

I. அதன் சரிவு $\frac{\Delta Qd}{\Delta P}$ மாறாதிருக்க விலை அதிகரிக்கும் போது கேள்வித் தொகை குறைதல்
II. அதன் சரிவு $\frac{\Delta Qd}{\Delta P}$ நிலையானதாயிருக்க விலை அதிகரிக்கும் போது கேட்கப்படும்
III. அதன் சரிவு $\frac{\Delta Qd}{\Delta P}$ மாற்றமடைய விலை, கேட்கப்படும் தொகைகள் மாறாதிருத்தல்
IV. சரிவு $\frac{\Delta Qd}{\Delta P}$ மேல்நோக்கிச் செல்லும் போது குறைவடைய அதன் விலை அதிகரித்தல்
V. பண்ட விலை குறைவடைய கேள்வித்தொகையும் சரிவு $\frac{\Delta Qd}{\Delta P}$ யும் குறையும்

10. பண்டமொன்றின் கேள்விச் சார்பு Qd=100-5p ஆகவும் நிரம்பல் சார்பு Qs=-20+5p ஆகவும் உள்ள போது சமநிலை விலை, சமநிலைத் தொகை யாது? சமநிலையில் விலை சார் கேள்வி நெகிழ்ச்சி விலை விலைசார் நிரம்பல் நெகிழ்ச்சி யாது?

	சமநிலை விலை	சுமநிலை தொகை	Ed	Es
(i)	12ரூபா	40அலகுகள்	-1.5	1.5
(ii)	12ரூபா	40அலகுகள்	1.5	-1.5
(iii)	10ரூபா	60அலகுகள்	1.2	-1.2
(iv)	10ரூபா	60அலகுகள்	-1.2	1.2
(v)	8ரூபா	30அலகுகள்	1.0	1.0

11. பண்டமொன்றின் கேள்விசார்பு Qd=20-5p நிரம்பல் Qs=-10+5p இப் பண்டத்தின் சமநிலை விலையில் நுகர்வோர் மிகை, வழங்குனர் மிகை யாது?

I. நுகர்வோர் மிகை, வழங்குனர் மிகை என்பன முறையே 2.50ரூபா
II. நுகர்வோர் மிகை, வழங்குனர் மிகை என்பன முறையே 5ரூபா
III. நுகர்வோர் மிகை, வழங்குனர் மிகை என்பன முறையே 7.50ரூபா
IV. நுகர்வோர் மிகை 2.50ரூபா வழங்குனர் மிகை 5ரூபா
V. நுகர்வோர் மிகை 5ரூபா வழங்குனர் மிகை 2.50ரூபா

12. அரசாங்கத்தால் தனது வருமானத்தை உச்சப்படுத்த பண்டம் ஒன்றின் மீது வரிவிதிக்கும் போது அது செயல்திறன் மிக்கதாக அமைய வேண்டுமாயின் அவற்றின் விலைசார் கேள்வி நெகிழ்ச்சி, விலைசார் நிரம்பல் நெகிழ்ச்சி என்பன

I. அலகு நெகிழ்வுடையதாக அமைய வேண்டும்
II. நெகிழ்வற்றனவாக அமைய வேண்டும்
III. நெகிழ்வுடையனவாக அமைய வேண்டும்
IV. கேள்வி நெகிழ்ச்சிவுடையதாகவும் நிரம்பல் நெகிழ்வற்றதாவும் அமைய வேண்டும்
V. கேள்வி நெகிழ்வற்றதாவும் நிரம்பல் நெகிழ்வுடையதாவும் அமைய வேண்டும்

13. குறித்த காலப்பகுதி ஒன்றில் X என்னும் பண்டத்தின் சந்தை பற்றிய தரவுகள் வருமாறு,

அலகு விலை	**கேள்வி தொகை**	நிரம்பல் தொகை
100	500	1100
90	600	1000
80	700	900
70	800	800
60	900	700

அரசாங்கம் பண்ட உற்பத்திக்கு அலகு மானியமாக 20 ரூபாவை வழங்கினால் மானியத்தின் பின் சமநிலை விலையும் தொகையும் முறையே

I. 60 ரூபாவும் 900 அலகும்
II. 50 ரூபாவும் 800 அலகும்
III. 90 ரூபாவும் 900 அலகும்
IV. 80 ரூபாவும் 700 அலகும்
V. 70 ரூபாவும் 800 அலகும்

14. உற்பத்தி செய்யப்பட்ட பொருளொன்றில் இருந்து வருமானத்தினை அதிகரிக்கும் நோக்குடன் பொருளின் விலையை ரூபா 4 இல் இருந்து அதிகரிப்பதனால் மொத்த வருமானம் அதிகரிக்கும் விதத்தினை பின்வரும் அட்டவணை காட்டுகிறது.

விலை (ரூபா)	மொத்த வருமானம் (ரூபா 000)
4	400
5	500
6	600

இப்பண்டத்தின் விலைசார் கேள்வி நெகிழ்ச்சி யாது?

I. பூரண நெகிழ்வுள்ளது
II. பூரண நெகிழ்வற்றது
III. ஒப்பீட்டு ரீதியாக நெகிழ்வுள்ளது
IV. ஒப்பீட்டு ரீதியாக நெகிழ்வற்றது
V. ஒருமை நெகிழ்ச்சியுடையது

15. உற்பத்தி நிறுவனம் ஒன்றினது தரவகள் வருமாறு

வெளியீட்டளவு	மொத்த செலவு	எல்லைச் செலவு
0	360	-
1	400	40
2	430	30
3	450	20
4	480	30
5	520	40

4 அலகின் உற்பத்திக்கான சராசரி நிலையான செலவு அளவு யாது?

I. 80ரூபா ii. 90ரூபா iii. 60ரூபா iv. 70ரூபா v. 100ரூபா

16. பின்வருவனவற்றில் எது நிறை போட்டிச் சந்தையொன்றின் பிரதான பண்பாகும்
    1. உற்பத்திகள் ஓரினத்தன்மை
    2. உற்பத்திகள் பொருள் வேறாக்கமுறையானவை
    3. உற்பத்திகள் தனித்துவமானவை
    4. உற்பத்திகள் கிட்டிய.்நெருங்கிய பதிலீடானவை
    5. உற்பத்திகள் இணைப்புத்தன்மையானவை

17. பொருளாதார இலாபத்திற்கும், உற்பத்தியாளர் மிகைக்கும் இடையிலான வேறுபாட்டிற்கு காரணமாவது,
    I. மொத்த வருமானமாகும்
    II. மொத்த மாறும் கிரயமாகும்
    III. மொத்த நிலையான கிரயமாகும்
    IV. கணக்கியல் இலாபமாகும்
    V. சந்தர்ப்ப கிரயமாகும்

18. எச்சந்தர்ப்பத்தில் நிறை போட்டி நிறுவனம் ஒன்று குறுங்காலத்தில் வெளியீட்டை நிறுத்தும்?
    I. உழைக்கும் இலாபமானது மொத்த மாறும் செலவை விட குறைவாக இருக்கும் போது
    II. உழைக்கும் இலாபமானது மொத்த நிலையான செலரை விட சராசரி வணரமானம் குறைவாக இருக்கும் போது
    III. சாரசரி செலவை விட சராசரி வருமானம் குறைவாக இருக்கும் போது
    IV. சராசரி மாறும் செலவை விட சராசரி வருமானம் குறைவாக இருக்கும் போது
    V. மொத்த இலாபத்திலும் பார்க்க மொத்த நிலையான செலவு அதிகரிக்கும் போது

19. உள்ளூரில் நிறை போட்டிச் சந்தையில் இயங்கும் நீச்சல் தடாகம் ஒன்றை யோன்சன் என்பவர் சுத்தம் செய்கின்றார். இவர் ஒரு இலாபத்தை உச்சப்படுத்துபவர். இவர் ஒரு நீச்சல் தடாகத்தை சுத்தப்படுத்த ரூ.10 அறவிடுகின்றார். நாளொன்றுக்கு 9 நீச்சல் தடாகங்களைச் சுத்தப்படுத்துகின்றார். இந் நடவடிக்கைக்கு ஏற்படும் மொத்த மாறும் செலவு ரூ.80 மற்றும் மொத்த நிலையான செலவு ரூ.20 ஆகும். இது தொடர்பான சரியான கூற்று
    I. யோன்சன் குறுங்காலத்தில் தொழிலை நிறுத்த வேண்டும் அத்துடன் பொருளாதார நட்டம் ரூபா 20
    II. யோன்சன் குறுங்காலத்தில் தொழிலை நிறுத்த வேண்டும் அத்துடன் பொருளாதார நட்டம் ரூபா 10
    III. யோன்சன் நாளொன்றுக்கு 9 நீச்சல் தடாகங்களைச் சுத்தம் செய்ய வேண்டும் அத்துடன் பொருளாதார நட்டம் ரூபா 20
    IV. யோன்சன் நாளொன்றுக்கு 9 நீச்சல் தடாகங்களைச் சுத்தம் செய்ய வேண்டும் அத்துடன் பொருளாதார நட்டம் ரூபா 10
    V. யோன்சன் நாளொன்றுக்கு 9 நீச்சல் தடாகங்களைச் சுத்தம் செய்ய வேண்டும் அத்துடன் பொருளாதார இலாபம் ரூபா 10

20. குறிப்பிட்ட ஒரு வருடக்காலப்பகுதியில் சராசரி விலை மட்டம் 10% அதிகரித்த போது மெய் உற்பத்தி மாறாது இருப்பதுக்கு பின்வருவனவற்றுள் எது நிச்சயமாக 10% ஆல் அதிகரித்து இருக்க வேண்டும்

I. மெய்த் தேசிய வருமானம்
II. பெயரளவு தேசிய வருமானம்
III. மெய் வட்டி வீதம்
IV. நாணயத்தின் வெளிநாட்டுப் பெறுமதி
V. பெயரளவு வட்டி வீதம்

21. நடைமுறை வெளிநாட்டு மட்டம் ரூபா 2500,000 சாத்திய வெளியீடு ரூபா 2600,000 எல்லை நுகர்வு நாட்டம் 0.75 ஆகவும் உள்ள ஒரு கெயின்சிய பொருளாதாரத்தில் பொருளியலாளர்கள் மிகவும் விரும்பத்தக்க நடவடிக்கை

I. வரியை ரூபா 25,000 ஆல் குறைத்தல்
II. வரியை ரூபா 100,000 ஆல் குறைத்தல்
III. அரச செலவீனத்தை ரூபா 25,000 ஆல் அதிகரித்தல்
IV. அரச செலவீனத்தை ரூபா 33,333 ஆல் குறைத்தல்
V. அரச செலவீனத்தை ரூபா 100,000 ஆல் அதிகரித்தல்

22. குறிப்பிட்ட ஒரு வருடத்தில் பெயரளவான மொத்த உள்நாட்டு உற்பத்தி 11% ஆல் வளர்ச்சியடைந்துள்ளது. அத்துடன் அமய் மொத்த உள்நாட்டு உற்பத்தி 4% ஆல் வளர்ச்சியடைந்துள்ளது ஆயின் இவ்வருடத்துக்கான பணவீக்கமாக இருக்கக் கூடியது,

I. -7%
II. 7%
III. 8%
IV. 11%
V. 15%

23. திறந்த பொருளாதாரமொன்று பற்றிய தரவுகள் பின்வருமாறு தரப்படுகிறது.

ரு.மில்லியனில்

* உள்நாட்டு சேமிப்பு -140
* வெளிநாட்டிலிருந்தான 2ம் நிலை வருமானம் தேற்று - 70
* வெளிநாட்டிலிருந்தான முதன்மை வருமானம் தேற்று - 80
* மொத்த முதலீடு -160
* மொத்த நுகர்வு -300


மேற்தரப்பட்ட தகவல்களுக்கமைய சரியா விடை

	மொத்த உள்நாட்டு உற்பத்தி	**செலவிடக்கூடிய மொத்த உள்நாட்டு உற்பத்தி**
I.	440	430
II.	300	360
III.	360	430
IV.	430	300
V.	360	440

24. மூடிய பொருளாதாரமொன்றின் முதலீடுகளில் ஏற்பட்ட அதிகரிப்பு பொருளாதாரத்தின் சமநிலை தேசிய வருமான மட்டம் 250 மில்லியனில் அதிகரித்தது. இதன் விளைவில் பொருளாதாரத்தின் தனிநபர் நுகர்வு மட்டம் 200 மில்லியனினால் அதிகரித்தது எனில் பொருளாதாரத்தின் செலவீட்டு பெருக்கியாக அமைவது.

I. 2
II. 0.8
III. 0.2
IV. 4
V. 5

25. பின்வரும் வரைபடத்தில் $0Y_1$ என்பது சமநிலை தேசிய வருமான மட்டத்தையும், $0Y_f$ என்பது நிறைத்தொழில் மட்ட தேசிய வருமான மட்டத்தையும் குறிக்கின்றது.
இப்பொருளாதாரத்தில் பணசுருக்க இடைவெளி யாது?



I. Yf – U
II. U – V
III. K – V
IV. M – V
Y1 – Yf

26. பொருளாதாரமொன்றின் ஏனைய காரணிகள் மாறாத நிலையில் பொருளாதாரமொன்றின் மொத்த கேள்வி அதிகரிப்பதற்கு காரணமாகும். நிகழ்வொன்று,

I. வருமானவரி அதிகரித்தல்
II. வட்டிவீதம் உயர்வடைதல்
III. சேமிப்பு குறைவடைதல்
IV. அரச செலவு உயர்வடைதல்
V. இறக்குமதி அதிகரித்தல்

27. பொருளாதாரமொன்றில் தொழிற்பிரிப்பு, சிறப்புத்தேர்ச்சி என்பன விரிவடைவதற்கு காரணமான பிரதான காரணியாக கருதக்கூடியது

I. பணம் பூரண திரவத்தன்மை கொண்டதாக இருத்தல்
II. பணம் பரிமாற்று ஊடகமாகத் தொழிற்படல்
III. பணத்தின் பெறுமதி நிலையாக இருத்தல்
IV. பணம் சிறந்த பெறுமான கணிப்பு அலகாகத் தொழிற்படல்
V. பணம் ஒரு பிற்போடப்பட்ட கொடுப்பனவு சாதனமாக தொழிற்படல்

28. பொருளாதாரமொன்றின் பண நிரம்பலுடன் தொடர்புடைய தரவுகள் சில வருமாறு:

(ரூ. பில்லியனில்)

பொதுமக்களிடமுள்ள சட்டமுறைப்பணம்	600
வணிக வங்கிகளிடமுள்ள சட்டமுறைப்பணம்	100
மத்திய வங்கியிடமுள்ள வணிக வங்கியின் ஒதுக்கம்	300
வெளிநாட்டு நாணய அலகில் உள்நாட்டில் காணப்படும் வைப்புக்கள்	1000
வணிக வங்கிகளிடம் காணப்படும் பொதுமக்களுக்குரித்தான கேள்வி வைப்பில் உள்ள தொகை	1400

இப்பொருளாதாரத்தின் உயர்வலுப்பணம் ரூ.100 பில்லியனாக அதிகரிப்பதன் குறுகிய பணநிரம்பல் ஏற்படும் அதிகரிப்பாக அமைவது,

I. 100 பில்லியன் அதிகரிப்பு
II. 200 பில்லியன் அதிகரிப்பு
III. 300 பில்லியன் அதிகரிப்பு
IV. 160 பில்லியன் அதிகரிப்பு
V. 260 பில்லியன் அதிகரிப்பு

29. தனியுரிமை வணிக வங்கியொன்றில் நீர் ரு.2500 ஐ வைப்பிலிடுவதாக கருதுக. குறிப்பிட்ட வங்கியானது தமது வைப்பு பொறுப்பில் 12.5% சட்டநியதி ஒதுக்காக பேணுவதாகவும் எவ்வித மிகை ஒதுக்கினையும் பேணுவதில்லை எனவும் கருதுக. உமது வைப்பின் நேரடி விளைவாக குறிப்பிட்ட வங்கியால் உருவாக்கக்கூடிய மேலதிக கடன்களின் உச்ச அளவு?

I. ரூ. 2187.5
II. ரூ. 312.5
III. ரூ. 20000
IV. ரூ. 17500
V. ரூ. 2125

30. இலங்கையின் விரிந்த பணநிரம்பலை தீர்மானிக்கும் காரணிகளின் மிகப் பிரதான பங்கை வகிக்கும் காரணியாக அமைவது?

I. வணிக வங்கிகள் கொண்டிருக்கும் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள்
II. மத்திய வங்கி கொண்டுள்ள தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள்
III. மத்திய வங்கி அரசிற்கு கொடுத்துள்ள கடன்களினளவு
IV. வணிக வங்கிகளால் அரசிற்கு கொடுத்துள்ள கடன்களினளவு
V. வணிக வங்கிகளால் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டுள்ள கடன்களின் அளவு

31. பின்வருவனவற்றுள் எது பெரும்பாலும் ஒரு நாட்டின் பணநிரம்பலில் அதிகரிப்பை ஏற்படுத்தவல்லது எது?

I. சென்மதி நிலுவையின் ஒரு மிகை நிலை
II. அரச பாதீட்டின் ஒரு மிகை நிலை
III. வணிக வங்கி வைப்பாளர்களால் பணம் மீளப்பெறப்படல்
IV. வணிக வங்கிகள் தாம் வழங்கிய கடன்களை மீளப்பெறல்
V. மத்திய வங்கியினால் வணிக வங்கிகளுக்குப் பிணைகள் விற்பனை செய்யப்படல்

32. பின்வருவனவற்றுள் செலவுத்தூண்டல் பணவீக்கத்தினை ஏற்படுத்தக்கூடியது?

I. தொழிலாளருக்கான கூலி அதிகரித்தல்
II. சக்திக்கான விலை குறைவடைதல்
III. வீட்டுத்துறையினரின் நுகர்வு அதிகரித்தல்
IV. அரச செலவீனம் குறைவடைதல்
V. பண நிரம்பல் அதிகரித்தல்

33. மத்திய வங்கியானது பகிரங்கச் சந்தையில் ஆவணங்களைக் விற்பனை செய்யுமாயின், பின்வருவனவற்றுள் எது நடைபெறக் கூடும்.
    I. வணிக வங்கிகளின் ஒதுக்குகள் உயர்வடைவதுடன் உயர்வலுப் பண இருப்பும் உயர்வடையும்
    II. வணிக வங்கிகளின் ஒதுக்குகள் குறைவடைவதுடன் உயர்வலுப் பண இருப்பும் குறைவடையும்
    III. வணிக வங்கிகளின் ஒதுக்குகள் உயர்வடைவதுடன் உயர்வலுப் பண இருப்பு குறைவடையும்
    IV. வணிக வங்கிகளின் ஒதுக்குகள் குறைவடைவதுடன் உயர்வலுப் பண இருப்பு உயர்வடையும்
    V. வணிக வங்கிகளின் ஒதுக்குகள் குறைவடைவதுடன் மிகை ஒதுக்குகள் காணப்படின் பண நிரம்பலும் உயர்வடையும்
34. மத்திய வங்கி தற்போது நாணயக் கொள்கைளைக் கடைபிடிக்கும் போது பயன்படுத்தப்படும் தொழிற்பாட்டு இலக்கு
    I. கொள்கை வட்டி வீதம்
    II. பகிரங்க சந்தை நடவடிக்கை
    III. சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்பு பணவீதம்
    IV. ஒதுக்குப்பணம்
    V. பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாடு

35. இலங்கை மத்திய வங்கியின் மேம்படுத்தப்பட்ட நாணயக் கொளகைக் கட்டமைப்பில் பிரதானமாக,
    1. ஒதுக்குப் பணம் பயன்படுத்தப்படுகின்றது
    2. வங்கி வீதம் பயன்படுத்தப்படுகின்றது
    3. இறைக்கொள்கை பயன்படுத்தப்படுகின்றது
    4. கொள்கை வட்டி வீதங்கள் மற்றும் திறந்த சந்தை நடவடிக்கைகள் பயன்படுத்தப்படுகின்றன
    5. எல்லை வட்டி வீதம் மற்றும் ஒழுக்கக்கட்டுப்பாடுகள் பயன்படுத்தப்படுனின்றன.

36. பின்வரும் பண்புகளில் அரைப்பொதுப்பொருளுக்குரிய பண்பாவது?
    I. இயலளவு மட்டம் வரை நுகர்வில் போட்டியற்றதும், சந்தர்ப்ப கிரயத்தை விஞ்சிய விலையையும் கொண்டுள்ள பண்டம்
    II. நுகர்வில் போட்டித்தன்மை கொண்டதும் சந்தர்ப்ப கிரயத்திற்கு உட்பட்ட விலை நிர்ணயிக்கப்பட்ட பண்டம்
    III. நுகர்வில் போட்டியற்ற நுகர்வை கட்டுப்படுத்தக்கூடிய பண்டம்
    IV. நுகர்வில் போட்டியற்ற நுகர்வை கட்டுப்படுத்த முடியாத பண்டம்
    V. அரசினால் சலுகை விலையில் வழங்கப்படும் பண்டம்

37. நிரம்பல் பக்க ஊக்குவிப்புக் கொள்கை கருவியாக கருதமுடியாதது
    I. வரி சீராக்கம்
    II. தனியார் மயமாக்கம்
    III. சேமிப்பை ஊக்கமடையச் செய்தல்
    IV. ஊழியச் சந்தையை சீர்செய்தல்
    vi. கண்காணிப்பு
38. வரையறுக்கப்பட்ட வளங்களை ஒதுக்கீடு செய்வதில் வினைத்திறன் இன்மையும், வளப்பகிர்வில் நியாயத்துவம் இன்மைகளும் தோன்றுவதால் சந்தைத் தோல்வி ஏற்படுகின்றது. அத்தகைய சந்தைத் தோல்வி ஒன்று ஏற்பட காரணமாக அமையாத விடயம் யாது?
    I. உற்பத்திகள் நுகர்வுகளில் வெளிவாரிகள் தோன்றுதல்
    II. வருமானங்கள் சொத்துக்களின் பங்கீட்டில் சமமின்மைகள்
    III. சந்தை பற்றிய பூரண தகவல்கள் கிடையாமை
    IV. உற்பத்திகளில் தோன்றும் தனியுரிமைகள், நிறைவில் போட்டிகள்
    V. சுதந்திரமான சந்தை அமைப்பும், நுகர்வோர் இறைமையாகும்

39. கீழ்வரும் தரவுகள் அனல் மின்னிலைய உற்பத்தி ஒன்று தொடர்பானதாகும்

தனியார் நலன்கள் 40 தனியார் செலவுகள் 34


சமூக செலவுகள் 60 சமூக நலன்கள் 66

இத்தரவுகள் தொடர்பாக பெறக்கூடிய முடிவுகள்

I. வெளிவாரியான நலன்களும் வெளிவாரி செலவுகளும் சமமாய் உள்ளது
II. வெளிவாரியான நலன்கள் வெளிவாரி செலவுகளை விட உயர்வானதாகும்
III. வெளிவாரியான நலன்கள் வெளிவாரி செலவுகளை விட குறைவானதாகும்
IV. தனியார் செலவை விட சமூகச் செலவு உயர்வு என்பதால் தீங்கான செயற்பாடாகும்
V. இவ் உற்பத்தியை தொடர்வது சிறந்ததல்ல

40. தரப்பட்ட வரைபு பண்டம் ஒன்றின் உற்பத்தி, நுகர்வு தொடர்பானதாகும். இகனடப்படையில் சரியான விடையைத் தெரிக.

I. உற்பத்தியில் நேர்க்கணிய வெளிவாரியும் குறை உற்பத்தி மட்டமும் உள்ளது
II. உற்பத்தியில் எதிர்க்கணிய வெளிவாரியும் குறை உற்பத்தி மட்டமும் உள்ளது
III. உற்பத்தியில் எதிர்க்கணிய வெளிவாரியும் மிகை உற்பத்தி மட்டமும் உள்ளது
IV. நுகர்வில் நேர்க்கணிய வெளிவாரியும் மிகை உற்பத்தி மட்டமும் உள்ளது
V. நுகர்வில எதிர்க்கணிய வெளிவாரியும் குறை உற்பத்தி மட்டமும் உள்ளது



தொ


41. பொருளாதார மந்த நிலையில் உள்ள பொருளாதாரமொன்றை மீட்சியடையச் செய்து பொருளாதார வளர்ச்சியை நோக்கி முன்னேற்றுவதற்கு சிறந்த நடவடிக்கை இனம் காண்க.

	அரச செலவீனம்	வரிவீதம்	வட்டிவீதம்	சேமிப்பு வீதம்	முதலீட்டுவீதம்	நுகர்வு
(i)	உயர்வு	உயர்வு	வீழ்ச்சி	உயர்வு	உயர்வு	வீழ்ச்சி
(ii)	உயர்வு	வீழ்ச்சி	உயர்வு	உயர்வு	உயர்வு	உயர்வு
(iii)	வீழ்ச்சி	உயர்வு	வீழ்ச்சி	உயர்வு	வீழ்ச்சி	உயர்வு
(iv)	உயர்வு	வீழ்ச்சி	வீழ்ச்சி	உயர்வு	உயர்வு	உயர்வு
(v)	வீழ்ச்சி	வீழ்ச்சி	வீழ்ச்சி	உயர்வு	உயர்வு	உயர்வு

42. அமெரிக்காவும், ஆபிரிக்காவும் தமது கூட்டு வளச் சேர்கையில் பயன்படுத்திய ஆயுதம், அரிசி உற்பத்தியில் ஈடுபடும் போது ஒரு அலகு உள்ளீட்டின் வெளியீட்டு மற்றல் அளவு வருமாறு.

இத்தரவின் பிரகாரம்

I. அமெரிக்கா ஆயுத உற்பத்திக்கு ஒப்பீட்டில் நன்மையானது
II. ஆபிரிக்கா அரிசி உற்பத்திக்கு ஒப்பீட்டில் நன்மையானது
III. அமெரிக்கா அரிசி உற்பத்திக்கு ஒப்பீட்டில் நன்மையாகவும் முழு நன்மையாகவும் உள்ளது
IV. ஆபிரிக்கா ஆயுத உற்பத்திக்கு ஒப்பீட்டில் நன்மையாகவும் முழு நன்மையாகவும் உள்ளது
V. அமெரிக்கா ஆயுத உற்பத்திக்கு முழு நன்மையையும் ஒப்பீட்டில் நன்மையையும் கொண்டுள்ளது




120 (அரிசி

43. திறந்த பொருளாதார முறைமையொன்றின் கீழ் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் சீமெந்து மூடையொன்றின் உள்நாட்டு சந்தை விலை ரூ.1000 இவ் உற்பத்தியின் பெறுமதியில் 60% ஆன உள்ளீடுகளை வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படுகிறது. இதே வகையான சீமெந்து சீனாவிலிருந்து ரூ.1000ற்கு இறக்குமதி செய்யப்படுகின்றது. இந்நிலையில் உள்நாட்டு சீமெந்து உற்பத்தியாளரை பாதுகாப்பதற்கென அரசு சகல இறக்குமதிகள் மீதும் 20% இறக்குமதி தீர்வை விதிப்பதாக கருதுக. இந்நிலையில் மெய் பயனுறுதி வாய்ந்த பாதுகாப்பு வீதமாக அமைவது?

I. 100%
II. 50%
III. 40%
IV. 20%
V. 10%

44. பின்வரும் வரைபடம் ஸ்ரேலிங் பவுனுக்கான நாணயமாற்று சந்தையில் இலங்கை ரூபாவிற்கான கேள்வி மற்றும் இலங்கை ரூபாவின் நிரம்பல் என்பவற்றைக் காட்டுகிறது.

ஆரம்பத்தில் சந்தை K புள்ளியில் சமநிலையடைகிறது. இலங்கையில் இருந்து ஏற்றுமதி செய்யப்படும் ஆடைகளுக்கான தீர்வை கணிசமான அளவு குறைக்கப்பட்டதன் காரணமாக இலங்கையிலிருந்தான பிரித்தானியாவிற்கான ஆடை ஏற்றுமதிகளுக்கான கேள்வி அதிகரித்தமையால் வெளிநாட்டு நாணயமாற்று சந்தையில் புதிய சமநிலைப்புள்ளி எதுவாக இருக்கும்.



I. A
II. B
III. C
IV. D
V. E

45. இலங்கையின் மேற்கொள்ளப்பட்ட வீட்டுத்துறை வருமானம், செலவு பற்றிய ஆய்வின் படி மிகச் செல்வந்த 20% சதவீதத்தினரும் மிக வறிய 20% சதவீதத்தினரும் பெற்றுக் கொண்ட வருமான சதவீதமானது

	மிக செல்வந்த 20%	மிக வறிய 20%
I.	40%	10%
II.	40%	12%
III.	50.8%	10%
IV.	50.8%	4.8%
V.	53.7%	4.8%

46. பின்வரும் அட்டவணை பொருளாதாரமொன்றில் தரப்பட்ட காலப்பகுதியொன்றுக்குரிய குடித்தொகை மற்றும் தொழிற்படை தரவுகளையும் காட்டுகிறது.

சனத்தொகை	**தொழில்புரியும் வயது சனத்தொகை**	**தொழிலற்றோர் வீதம்**	**தொழில் வாய்ப்பில் உள்ளோர்**
30M	25M	20%M	16M

இப்பொருளாதாரத்தின் தொழிலற்றோர் வீதமும் முறையே **தொழிற்படை பங்குகொள்ளல் வீதம்**

	தொழிலற்றோர்	**தொழிற்படை பங்குகொள்ளல் வீதம்**
I.	4M	80%
II.	9M	25%
III.	4M	25%
IV.	9M	80%
V.	5M	31.25%

47. வளமான நாடு இலங்கை (2025) எனும் தொனிப்பொருளுடனான விஷன் 2025 (V2025) உடன் தொடர்புடைய பின்வரும் தகவல்கள் தரப்படுகின்றன.


A. அனைவருக்கும் வீட்டு வசதி
B. சக்தி மிக்க நிதிவளம்
C. பொருத்தமான நிலையான விலை
D. அறிவை அடிப்படையாகக் கொண்ட சமூகம்
E. சந்தையை அடிப்படையாகக் கொண்ட செலாவணி வீதம்

மேற்குறிப்பிட்டவற்றுள் V2025ன் பேரினப்பொருளாதாரத்தின் முக்கியமான மூன்று தூண்களையும் உள்ளடக்கிய சரியான விடை

I. A,B,C
II. B,C,D
III. B,C,E
IV. A,C,E
V. C,D,E

48. கீழ்வரும் வரைபடம் நாடொன்றினது அடுத்து வரும் வருடங்களின் வருமான பங்கீடு தொடர்பான லோரன்ஸ் வளையியை A,B,C எனக் காட்டுகின்றது. அதனடிப்படையில் தவறான விடையை தெரிக.

வருமானத்தின்
கூட்டு சதவீதம்



வருமானம் உழைப்போரது கூட்டு சதவீதம்

I.கினிக் குணகத்தில் வீழ்ச்சிப் போக்கு உள்ளது
II.செல்வந்தர்கள் மீதான வரிகள் உயர்த்தப்பட்டுள்ளது
III.வருமானப் பரம்பல் ஏற்றத்தாழ்வு வீழ்ச்சிடைந்துள்ளது
IV.குறைந்த வருமானம் பெறுபவர் மீதான மாற்றல் கொடுப்பனவுகள் அதிகரிக்கப்பட்டுள்ளது
V.மேற்கூறியவற்றுடன் வறுமைக்கு சார்பான பொருளாதார வளர்ச்சி ஏற்படடுள்ளது

49. பின்வருவனவற்றில் வளர்ச்சியடைந்து வரும் நாடுகளுக்கான மனித வறுமைச்சுட்டியில் உள்ளடக்கப்படாத விடயம் யாது?

I. தாழ்ந்த வருமான மட்டத்தில் உள்ள (வறுமைக் கோடு) சனத்தொகை அளவு
II. பிறப்பின் போது 40 வயது வருவதற்கு முன் உயிர் வாழ முடியாமல் போவோர் அளவு
III. சிறந்த நீர் மூலாதாரத்தை தேவைக்கேற்ப பெற முடியாதோர் வீதம்
IV. வளர்ந்தோரிடையே எழுத்தறிவு வீதம்
V. சிறுவர்கள் வயதுக்கேற்ப உடல் வளர்ச்சியை கொண்டிருக்காமை

50. இலங்கையின் அண்மைகால பொருளாதார தரவுகளில் பின்வரும் சேர்கைகளில் சரியான விடையாவது(2017 ம் ஆண்டு)

	உலகலாவிய போட்டிச் சுட்டென்	கினிக்குணகம்	பொருளாதார வளர்ச்சி வீதம்
i	81	0.48	4.1
ii	71	0.45	4.1
iii	71	0.48	5.2
iv	81	0.45	3.1%
V	75	0.45	3.1